


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், கேடயங்களையும் நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று (20.07.2016) வழங்கினார். மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர் க. சேவியர் ஜோதி சற்குணம் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 461/2016 நாள்: 20.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாதாந்திர விளையாட்டு போட்டிகளை இன்று (20.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், வீர, வீராங்கனைகளுக்கு பல்வேறு விதமான உதவித் தொகைகள், ஊக்கத் தொகைகள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு விதமான விளையாட்டு போட்டிகள் நடத்தி, அவர்களின் விளையாட்டு திறமைகளை வெளிபடுத்திட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளை நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று (20.07.2016) கொடியசைத்து துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பள்ளி மாணவ, மாணவியர்களின் திறமைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்கள்.

அதனடிப்டையில் கன்னியாகுமரி மாவட்ட அளவிலான ஜூலை மாதத்திற்கான மாதாந்திர விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகிறது. இதில் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 200 மீ, 400 மீ, 1500 மீ தடகளம் போட்டிகளும், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், 50 மீ, 100 மீ, 200 மீ, 400 மீ, (பீரி ஸ்டையில்), 50 மீ (பேக் ஸ்டோர்க்), 50 மீ (பிரஸ்ட் ஸ்டோர்க்), 50 மீ (பட்டர்பிளை) மற்றும் 200 மீ (தனி நபர் மெட்லே), குழு விளையாட்டு போட்டிகள் கால்பந்து மற்றும் வாலிபால் என நான்கு விதமான போட்டிகள் நடத்தப்படுகிறது. மேலும் குழு விளையாட்டுகளில் ஒரு பள்ளியிலிருந்து ஒரு மாணவர் அணியும், ஒரு மாணவியர் அணியும் மட்டுமே கலந்து கொள்வார்கள். தடகளம் மற்றும் நீச்சல் ஆகிய தனிநபர் போட்டியில் ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். மேலும் இப்போட்டிகளின் மூலம் வீரர், வீராங்கணைகளின் திறமைகளை கண்டறியப்பட்டு, உலகளவிலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு, வெற்றிபெற இது ஒரு பயிற்சியாக அமையும் என தெரிவித்தார்.

பின்னர், 1500 மீ தடகளப் போட்டி பெண்கள் பிரிவில் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற நாகர்கோவில் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை மேல்நிலைப்பள்ளியை சார்ந்த செல்வி எம்.ஆர். மித்ரா-க்கு முதல் பரிசும், வாவறை, புனித பிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த செல்வி. நிதின்ஷா-க்கு இரண்டாம் பரிசும், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை மேல்நிலைப்பள்ளியை சார்ந்த செல்வி. எஸ். மாளவிகா-க்கு மூன்றாம் பரிசும், ஆண்கள் பிரிவில் வாவறை, புனித பிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த செல்வன். ஷெஜின்-க்கு முதல் பரிசும், அதே பள்ளியை சார்ந்த செல்வன் கே.பி. சிபின்-க்கு இரண்டாம் பரிசும், கூட்டுமங்கலம், எஸ்.எவி.எம். மேல்நிலைப்பள்ளியை சார்ந்த செல்வன். ஜெ.ஏ. ஆஷிக்-க்கு மூன்றாம் பரிசு என தடகள போட்டி 1500 மீ, ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற ஆறு வீரர், வீராங்கணைகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும், கேடங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு முன்பாக பள்ளி மாணவ, மாணவியர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர் க. சேவியர் ஜோதி சற்குணம், வீரர், வீராங்கணைகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.